செய்தி வெளியீடு எண்–831 நாள்– 31–12–2007

# செய்தி வெளியீடு

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களின் பாதுகாப்பு சம்மந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இன்று மாலை தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், டி.ஜி.பி., அடிஷனல் டி.ஜி.பி., சட்டம் ஒழுங்கு மற்றும் புலனாய்வுத் துறை, சென்னை மாநகர காவல் துறை ஆணையர் ஆகியோரைக் கொண்ட கலந்துரையாடல் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு :–

ஏற்கனவே தமிழகத்தின் அரசியல் கட்சித் தலைவர்களைத் தொடர்பு கொண்டு அவர்கள் அரசின் பாதுகாப்பினை ஏற்றுக் கொள்கிறார்களா என்ற அவர்களின் இசைவினைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் ஒரு சில தலைவர்கள் காவல் துறையினர் அளித்த பாதுகாப்பினை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். வேறு சிலர் பாதுகாப்புத் தேவையில்லை என்று கூறிவிட்டார்கள். ஒரு சிலர் எந்தவிதமான பதிலும் அனுப்பவில்லை. இந்தச் சூழ்நிலையில், மேற்படி தலைவர்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் தொடர்பு கொண்டு பாதுகாப்பின் முக்கியத்துவத்தை விளக்கமாக அவர்களுக்கு எடுத்துக் கூறி,

**காவல்துறையினரின் பாதுகாப்பை அவர்கள் ஏற்றுக் கொள்ளச் செய்ய முயற்சி மேற்கொள்ளப்படும்.**

**முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களின் பாதுகாப்பு பற்றி தொடர்ந்து சீரிய முறையில் பணியாற்ற வேண்டுமென்று காவல் துறை இயக்குநர் மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத் தினார்கள்.**

* * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.